ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹா தேசிகாய நம:

# SPVST SABHA

Sri Prahalada Varadhan Sripaadam Thangigal Sabha

No.4, Kesar Mahal, Pestom Sagar, Road No.3, Chembur, Mumbai - 400089.
Tel.: 2523 2276. Mob.: 99675 04474. Email: spvstsabha@yahoo.com.

# விடையாற்றி உத்ஸவப் பத்திரிகை



## பக்தஸ்ய தானவ ஸிஸோ: பரிபாலநாய
## பத்ராம் ந்ருஸிம்ஹ குஹநாம் அதிஜக்முஷஸ்தே

ஸ்ரீயப்பதியான ஸர்வேஸ்வரனின் அவதாரங்களிலேயே சிறந்ததான அவதாரம் ஸ்ரீ ந்ருஸிம்ஹ அவதாரம். காக்கும் அவதாரம் என்று போற்றப்படும் இவ்வவதாரத்தின் பெருமைகளை பறைசாற்றவே ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தீ மஹோத்ஸவம் ஒவ்வொரு ஆண்டும் ராமாநுஜ க்ஷேத்திரமான திருச்செம்பூர் ஸ்ரீஅஹோபில மடம், ஸ்ரீந்ருஸிம்ஹன் திருக்கோயிலில் கோலாகலமாக கொண்டாடப் படுகிறது. நாளது ஸர்வதாரி வருஷம் சித்திரை மீ 27உ முதல் வைகாசி மீ 7உ வரை (09.05.08 முதல் 20.05.08 வரை) நடைபெறும் இம்மஹோத்ஸவத்தில் தினந்தோறும் காலையில் திருமஞ்சனமும் மாலையில் பலவகையான வாஹனங்களில் விசேஷ அலங்காரங்களுடன் திருவீதி புறப்பாடும் நடைபெறும்.

இம் மஹோத்ஸவத்தின் கடைசி நாளான விடையாற்றி உத்ஸவம் ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யாநுக்ரஹத்தை முன்னிட்டு நமது ஸபையின் கைங்கர்யமாக, அங்கத்தினர்கள் மற்றும் மும்பை மஹா ஜனங்களின் ஒத்துழைப்புடன் ப்ரதி வருடம் போல் இவ்வருடமும் நாளது ஸர்வதாரி வருடம், வைகாசி மீ 7உ செவ்வாய் கிழமை (20.05.2008) அன்று வெகுசிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

விடையாற்றி உத்ஸவ நாளன்று ஸ்ரீப்ரஹ்லாதவரதன் உபயநாச்சியார்களுடன் காலையில் விசேஷ திருமஞ்சனம் கண்டருளி மாலையில் சந்தனக்காப்புடன் ஸேவை ஸாதிப்பார். தூமலர் தூவித் தொழுது என்ற கோதை நாச்சியாரின் வாக்குப்படி, விசேஷ மணங்கள் கொண்ட, வித விதமான மலர்களைக் கொண்டு வேதவித்பன்னர்களின் வேத கோஷத்துடன் ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவரும் பல்லாண்டுபாட புஷ்பயாகமும், அதன்பின் விசேஷ அலங்காரங்களுடன் புஷ்ப பல்லக்கில் நாதஸ்வர கச்சேரி மற்றும் நாம ஸங்கீர்த்தனத்துடனும் திருவீதி புறப்பாடும் நடைபெறும்.

இந்த மஹோத்ஸவத்தில் பக்த மஹாஜனங்கள் அனைவரும் பங்கு கொண்டு, திரவ்ய ஸஹாயமும் செய்து பகவத்பாகவத ஆசார்ய கிருபா கடாக்ஷத்திற்கு பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

*செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தினர்கள்*
*ஸ்ரீப்ரஹ்லாதவரதன் ஸ்ரீபாததாங்கிகள் ஸபை*